**23 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை – 15**

**முன்னிலை : திருமதி. கே.ஆர். பத்மகுமாரி, பி.ஏ.,எல்எல்எம்.,**
**பிஜிடி.ஏ.டி.,ஆர்.,**
**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்**

**2026 ம் ஆண்டு மே திங்கள் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**வருடாந்திர வழக்கு எண் 332/2025**

**CNR No. TNCH0C-000912-2025**

**<u>தீர்ப்புரை</u>**

1. **வழக்கு வரிசை எண் :** **332/2025**

2. **சம்பவ நாள் :** **20.04.2023**

3. **முறையிடுபவர் :** தமிழ்நாடு மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
இ 4 அபிராமபுரம் காவல் நிலையம்
சென்னை– 28
குற்ற எண்: 101/2023

4. **எதிரியின் பெயர் மற்றும் முகவரி**

**சங்கர்,**
த/பெ. சீனிவாசன்,
எண். 8, முல்லை தெரு,
எம்ஜிஆர் சிலை அருகில், பெருங்குடி,
சென்னை–97.

5. **முறையீடு செய்யப்பட்ட குற்றம் :**

இவ்வழக்கின் எதிரி, சாட்சி–1 யை வழிமறித்து, அசிங்கமாக பேசி, கத்தியால் மார்பில் கீறி, கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரியின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**6. எதிரியின் வாதுரையும், அவரது விசாரணையும் :**

இறுதியறிக்கையின் படி முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு, எதிரி முன்னிலையாகி அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரியின் மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**7. முடிவான ஆணை** : எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**8. ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள்** : 22.05.2026

**9. இறுதியறிக்கையின் படி அரசுதரப்பு வழக்கின் சுருக்கமான காரணங்கள் :**

கடந்த 20.04.2023ம் தேதி 18.30 மணியளவில் இ4 அபிராமபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சம்பவ இடமான அன்னை சத்யா நகர், 5வது தெரு சந்திப்பில் சாட்சி–1 ஹரிஹரன் என்பவர் நடந்து சென்றுக்கொண்டிருந்த போது, எதிரி, சாட்சி–1யை வழிமறித்து, தகாத வார்த்தையால் திட்டி, மார்பில் கை வைத்து தள்ளி கத்தியால் மார்பில் கிறீ, சாட்சி–1 மற்றும் சாட்சி–2யை கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரியின் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii)ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இ4 அபிராமபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**10. அரசுதரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

**அ.சா–1** ஹரிகரன் சாட்சியத்தில் கல்லூரி படித்து வந்த போது சம்பவம் நடந்தது, சம்பவத்தை பற்றி தற்போது ஞாபகமில்லை, எதிரி மீது புகார் கொடுத்தேன், நானும் எதிரியும் சமாதானமாக செல்கிறோம், வழக்கை மேற்கொண்டு நடத்த வேண்டாம் என்று அரசு தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா–2** திரு. சங்கரன் சாட்சியத்தில் கடந்த 21.04.2023 ம் தேதி காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது, ஹரிகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, வழக்கு பதிவு செய்து, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, எதிரியை கைது செய்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு எதிரிக்கு எதிரான அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 313 ன் கீழ் கேள்விகள் கேட்கப்பட்ட போது எதிரி அவை பொய்சாட்சியம் என கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் இல்லை என தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**12.** அரசு தரப்பில் இந்த வழக்கு மெய்பிக்கப்பட்டு விட்டதாகவும், எனவே தகுந்த தண்டனை வழங்க வேண்டும் எனவும் வாதிடப்பட்டது. எதிரி தரப்பில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பால் ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என வாதிடப்பட்டது.

13. <u>தீர்வு</u> :

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சாட்சியத்தில் சம்பவத்தை பற்றி தற்போது ஞாபகமில்லை, எதிரியும் அ.சா.1ம் சமாதானமாக செல்கிறோம், வழக்கை மேற்கொண்டு நடத்த வேண்டாம் என்று அரசு தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் மேற்படி அ.சா.1யை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே இதர சாட்சிகள் தேவையில்லை என்று அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டனர்.

**14.** எதிரி குற்ற செயலினை புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியின் சாட்சியம் அமையாத காரணத்தினாலும், இவ்வழக்கின் எதிரி குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டதை நிரூபணம் செய்யும் வகையில், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியின் சாட்சியம் ஆகியவை எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு கொடுத்து, எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15.** இறுதியாக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. அவர் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு

சொத்துகள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. எனவே வழக்கு சொத்து பற்றிய ஆணை எதுவும் இல்லை.

இந்த தீர்ப்பு என்னால் உதவியாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மே திங்கள் 22 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/கே.ஆர். பத்மகுமாரி,

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்,**
**சைதாப்பேட்டை, சென்னை – 15.**

<u>**பின் இணைப்பு**</u>

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | ஹரிகரன் |
| 2. | அ.சா.2 | திரு. சங்கரன், காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ 4 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**
**மற்றும் சான்று பொருட்கள் : இல்லை**

**<u>குறிப்பு</u> :**

1. தீர்ப்பு பற்றிய விவரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் மூன்று வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்திவைக்கவில்லை.

//உண்மை நகல்//

K R PADMA KUMARI

Digitally signed by K R PADMA KUMARI
Date: 2026.05.22 14:28:15 +0530

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்,**
**சைதாப்பேட்டை, சென்னை – 15.**